# கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் தொடர்பான வாய்மொழி, வரலாற்று, ஐதீகக் கதைகளும் போருக்கு முந்திய ஆலயத்தின் கலையம்சங்களும் – ஓர் ஆய்வு.

**மீரா, க. , புஸ்பரட்ணம், ப.**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
**ganendranmeera@gmail.com**

*தென்னாசிய நாடுகளின் வரலாறானது ஐரோப்பியரது ஆட்சிக்கு முன்னர் வாய்மொழி, வரலாற்றுக் கதைகள், ஐதீகங்கள், புராண, இதிகாச மரபுகளை அடிப்படையாகக் கொண்டே தோற்றம் பெற்றிருந்தது. இலங்கையிலும் இத்தகைய அம்சங்களே வரலாற்று மரபின் தோற்றத்தில் பெரும்பங்கு வகித்திருந்தது. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தைத் தொடர்ந்து தொல்லியல் ஆய்வுகள் தோற்றம் பெற்றிருந்தாலும் அவை பெரிதும் வாய்மொழி, ஐதீகக் கதைகளைத் தழுவி எழுந்த பாளி இலக்கிய நூல்களில் இடம்பெற்ற செய்திகளை உறுதிப்படுத்தும் விதமாகவே அமைந்திருந்தது. வரலாற்று, ஐதீகக் கதைகள் வழியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளும் கூட அக்கதைகளின் உண்மைத் தன்மையை நிரூபிக்கும் வகையில் அமைந்திருந்தன. இக்கதைகள் மிகைப்படுத்தப்பட்ட நம்ப முடியாத கற்பனைக் கதைகளாக இருந்தாலும் மக்களின் நம்பிக்கைகளுடன் இரண்டறக் கலந்து விட்டன. அந்தவகையில் வடஇலங்கையிலுள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயமானது பல்வேறு வாய்மொழி, ஐதீக, புராண, இதிகாச, வட்டார வழக்குக் கதைகளுடன் தொடர்புபட்டதாகும். இதிகாச கதைகளான இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றின் கதாநாயகர்களான இராமர் மற்றும் அர்ஜூனன் போன்றோர் கீரிமலையின் சாகரசங்கம தீர்த்தத்தில் நீராடி இறைவனை தரிசித்தார்கள் என்றும் இராவணனின் வீணையைக் கவர்ந்து வந்த சுசங்கீதன் என்ற கந்தர்வன் கீரிமலைச் சாரலில் இருந்து வீணை மீட்டி இறைவனது ஆசியைப் பெற்றான் என்றும் கூறப்படுகிறது. மற்றும் நளன், முசுகுந்தன் போன்றோரும் கீரிமலைக்கு வந்து தீர்த்தமாடி இறைவனின் ஆசி பெற்றார்கள் என்ற செய்தியை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. பாளி இலக்கியங்களில்க் குறிப்பிடும் இலங்கையின் முதல் மன்னனான விஜயனின் வருகையுடன் தொடர்புபடுத்தியும் நகுலேஸ்வரத்துடன் தொடர்புபட்ட ஐதீகக் கதைகள் காணப்படுகின்றன. மேலும் நகுல முனிவர், கதிரைமலையின் மன்னன் எனக் கூறப்படும் உக்கிரசிங்கன், சோழ இளவரசி மாருதப்புரவிகவல்லி போன்றோருடன் தொடர்புபடுத்தப்பட்ட ஐதீக, வாய்மொழிக் கதைகளும் இவ்வாலயத்தை மையப்படுத்திக் காணப்படுகின்றன. அத்துடன் இவ்வாலயம் பாசுபத சமயப் பிரிவுக்குரிய ஆலயம் என்றும் ஒரு கருத்துண்டு. அந்தவகையில் திருத்தம்பலேஸ்வரம் என்று குறிப்பிடப்பட்ட முதலாவது கீரிமலை சிவன் கோயில் கடற்கோளால் கடலுள் அமிழ்ந்து விட்டது என்றும் இரண்டாவது ஆலயம் போர்த்துக்கேயர் காலத்தில் இடித்தழிக்கப்பட்டது என்றும் இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. மூன்றாவது ஆலயம் ஆறுமுகநாவலரின் தூண்டுதலால் 1895 இல் மீள அமைக்கப்பட்டது. அவ்வாலயம் 1990 ஆம் ஆண்டு யுத்தத்தால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி மீள அமைக்கப்பட்டு 2012 இல் நான்காவது ஆலயம் சீரமைக்கப்பட்டுள்ளது.*